**கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்.**

**அசல் வழக்கு எண்.269/2020**

**பி.வா.சா. – 4 –பிச்சையம்மாள்**

**நாள். 03.07.2025**

பி.**வா.சா.4 இன்று ஆஜராகி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 1ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

வழக்கில் சாட்சி சொல்ல சம்மன் எதுவும் வரவில்லை. என்னை நீதிமன்றத்திற்கு மரியாள் சிறுமணி என்பவர் என்னை அழைத்து வந்தார். இறந்து போன தர்மராஜ் மற்றும் அவரின் மகள்களுக்காக நான் சாட்சி சொல்ல வந்திருக்கிறேன் என்றால் சரிதான். 1ஆம் பிரதிவாதி ஞானபிரகாஷ் அவரின் கடின உழைப்பால் கிடைத்த வருமானத்தை கொண்டு தாவா சொத்தை பெயரளவில் 1ஆம் பிரதிவாதியின் தகப்பனார் பெயரில் கிரைய வாங்கினார் என்றால் சரியல்ல. தர்மராஜ் தான் வாங்கி கொடுத்தார். தாவா சொத்தை ஞான பிரகாசம் தான் விவசாயம் செய்து வந்தார் என்றால் சரியல்ல. அவரின் தகப்பனார் தர்மராஜ் விவசாயம் செய்து வந்து தற்போது அவரின் மகள்கள் விவசாயம் செய்து வருகிறார்கள். நான் தாக்கல் செய்துள்ள நிருபண வாக்குமூலத்தில் தர்மராஜ் அவர்கள் தாவா சொத்தை அடமானமாக காட்டி தொகை பெற்றுக்கொண்டு மேற்படி தொகைக்கு ஆதரவாக ஈடு பத்திரம் ஒன்றை எழுதிக்கொடுத்தார் என்பதும் மற்ற விபரங்களும் எனக்கு நேரடியாக தெரியாது.

**மறுவிசாரணை இல்லை.**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

P VELMURUGAN

Digitally signed by P VELMURUGAN
Date: 2025.07.03 18:07:25 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.